பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 230

செவ்வாய்க்கிழமை
15 ஜூலை 2025

ஆனி 31 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## வடக்குக் கடற்பரப்பில் சிவப்பு எச்சரிக்கை!

விரிவு பக்:- 02

## சிறுமிக்குத் தொல்லை; ஒருவர் கைது

யாழ்., பெப். 15
அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு வந்திருந்த புலம்பெயர் வாசியொருவர், சிறுமியொருவருக்கு பாலியல் 11



யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும்

# ஒன்றரை லட்சம் தென்னைகளில் வெள்ளை ஈயால் பேரழிவு!

யாழ்ப்பாணம், ஜூலை 15

வெள்ளை ஈ தாக்கத்தால் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மட்டும் ஏறத்தாழ ஒன்றரை லட்சம் தென்னை மரங்கள் பாதிப்படைந்துள்ளன என்று தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் தலைவர் மருத்துவர் சுனிமல் ஜெயக்கொடி தெரிவித்துள்ளார். 11

ஜனாதிபதி செயலகம் முன்பாக

## காணி விடுவிப்பை வலியுறுத்தி போர்

கொழும்பு, ஜூலை 15
யாழ்ப்பாணம் வலிகாமம் பகுதியில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காணிகளை விடுவிக்குமாறு வலியுறுத்தி, கொழும்பில் உள்ள ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக இன்று காலை போராட்டம் இடம்பெறவுள்ளது. 11

## இன்னும் திருத்தப்படாத வீதி ஜனாதிபதி உத்தரவு உதாசீனமா?

யாழ்ப்பாணத்தில் இந்த நிலை

யாழ்ப்பாணம், பெப். 15
யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வைத்து, ஜனாதிபதி அநுர உடனடியாகத் திருத்துமாறு உத்தரவிட்டிருந்த வீதியொன்று, இன்றளவும் சீரமைக்கப்படாமல் காணப்படுகின்றது குண்டும் 11

## பயங்கரவாதம் தொடர்பான விரிந்த பார்வை வேண்டாம்

ஜயம்பதி விக்கிரமரத்ன அறிவுறுத்து



கொழும்பு, ஜூலை 15
பயங்கரவாதம் என்ற சொல்லுக்கு பரந்துபட்ட வரைவிலக்கணம் வழங்கப்படுவதானது நாட்டு மக்களும், செயற்பாட்டாளர்களும் நெருக்கடிகளுக்கு உள்ளாக இடமளிக்கும் என்று கலாநிதி ஜயம்பதி விக்கிரம 11

## திசைகாட்டி அரசாங்கம் திருடர்களைப் பாதுகாக்காது

பொன்சேகா புகழாரம்



கொழும்பு, ஜூலை 15
தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் கொள்ளையர்களைப் பாதுகாக்கவில்லை. புதிய அரசாங்கத்தின்கீழ் கிடைக்கப்பெற்றமிகப்பெரியவெற்றி இதுவாகும் என்று முன்னாள் இராணுவத்தளபதி பீல்ட்மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
சில துறைகளில் இந்த அரசாங்கம் பலவீனமாக உள்ளது என்பது தெரிகின்றது. 11

## தனிமையில் வசித்தவர் சடலமாக மீட்பு!

யாழ்., பெப். 15
தனிமையில் வசித்து வந்த நபரொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். 11

## குடும்பத்தலைவர் மீது கந்துவெட்டிக் குழு தாக்குதல்

நால்வருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், பெப். 15
குடும்பத்தலைவர் ஒருவருக்கு மீற்றர் வட்டிக்குப் பணம் வழங்கிய கும்பலொன்று, வட்டிப்பணத்தை வசூலிப்பதற்காக அவரைக் கடத்திச்சென்று கொடூரமாக 11




'நொந்துபோய்க் கிடக்கிற சனங்களுக்கு இப்ப கந்துவட்டிக்காறராலையும் ஆய்க்கினை கண்டியளோ'



வடமத்திய மாகாணசபையின்

## முதல் தமிழ்ப் பெண் செயலாளராக சுபாஜினி மதியழகன் பொறுப்பேற்பு!

யாழ்ப்பாணம், பெப். 15
வடமத்திய மாகாண சபையின் முதலாவது தமிழ்ப் பெண் செயலாளராக, சுபாஜினி மதியழகன் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.
சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராகக் கடமையாற்றிய 11

## பழிவாங்கல் நடவடிக்கையே அதிபருக்கான இடமாற்றம்!

ஏழாலை சைவமகாஜன மாணவர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், பெப். 15
யாழ்ப்பாணம் ஏழாலை சைவமகாஜன வித்தியாலய அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டமையைக் கண்டித்தும், அவர் மீண்டும் நியமனம் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தியும் பாடசாலை மாணவர்களும், பெற்றோரும் இணைந்து 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 14.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4132 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 23 42 45 69 |
| விசேட எழுத்து | D |

| ஹந்தஹண ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 14.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1199 |
| வெற்றி இலக்கினம் | தனுசு |
| வெற்றி இலக்கங்கள் | 13 43 46 53 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 14.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0158 |
| ஆங்கில எழுத்து | D |
| வெற்றி இலக்கங்கள் | 7 1 7 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 14.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2238 |
| ஆங்கில எழுத்து | H |
| சுப்பர் இலக்கம் | 24 |
| வெற்றி இலக்கங்கள் | 33 46 62 72 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 14.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5890 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 5 7 0 0 0 0 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 14.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1920 |
| ஆங்கில எழுத்து | Z |
| வெற்றி இலக்கங்கள் | 36 39 71 76 |
| விசேட எழுத்து | Z |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 14.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0465 |
| ஆங்கில எழுத்து | Y |
| வெற்றி இலக்கங்கள் | 0 0 0 0 |

| சுப தவசக் | |
|---|---|
| திகதி | 14.07.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0006 |
| வெற்றி இலக்கினம் | மிதுனம் |
| வெற்றி இலக்கங்கள் | 15 36 47 49 |

# தேங்காய் எண்ணெய் பொதியிடல் கட்டாயம்

## அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிப்பு

**கொழும்பு, ஜூலை 15**

**பொதிசெய்யப்படாத தேங்காய் எண்ணெய் விற்பனையை நிறுத்துவதற்கான அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் சாந்த ரணவக்க தெரிவித்துள்ளார்.**

தேங்காய் எண்ணெய் என்ற பெயரில் பல்வேறு வகையான எண்ணெய்கள் சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன என்றும், அதைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

கலப்பட எண்ணெய்களை உட்கொள்வதால் தொற்றாநோய்கள் ஏற்படும் சாத்தியங்கள் உள்ளன. சந்தையில் வெளியிடப்படும் எண்ணெய் உற்பத்தியாளர் உட்பட தேவையான அனைத்துத் தகவல்களையும் உள்ளடக்கிய பொதியுடன் சந்தைக்கு விடப்பட வேண்டும்.

உரிய அவகாசம் வழங்கப்பட்ட பின்னர் இந்த நடைமுறையை இறுக்கமாகச் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | | |
|---|---|---|---|
| திகதி | 14.07.2025 | தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | D | வெற்றி இலக்கம் | 3 8 6 6 7 3 |
| வெற்றி வாரம் | 0598 | | |

| Super Ball DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 14.07.2025 | தினம் | திங்கட்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2864 | ஆங்கில எழுத்து | M |
| வெற்றி இலக்கம் | 18 45 54 69 | | |

| சனிதா DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 14.07.2025 | தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | H | வெற்றி இலக்கம் | 01 07 16 43 |
| வெற்றி வாரம் | 5025 | | |

| லக்ன ராசி DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 14.07.2025 | தினம் | திங்கட்கிழமை |
| கடகம் | ♋ | வெற்றி இலக்கம் | 04 26 39 56 |
| சீட்டிழுப்பு வாரம் | 4576 | | |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 14.07.2025 | தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | G | சுப்பர் இலக்கம் | 18 |
| வெற்றி இலக்கம் | 04 09 17 75 | வெற்றி வாரம் | 2040 |

| அத கோடிபதி DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 14.07.2025 | தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | V | வெற்றி இலக்கம் | 03 11 25 70 |
| வெற்றி வாரம் | 2690 | | |

| JAYODA DLB | | | |
|---|---|---|---|
| திகதி | 14.07.2025 | தினம் | திங்கட்கிழமை |
| ஆங்கில எழுத்து | C | வெற்றி இலக்கம் | 21 38 41 54 |
| வெற்றி வாரம் | 2143 | | |

# பழம்பெரும் நடிகை சரோஜாதேவி மறைவு



**சென்னை, ஜூலை 15**

பழம்பெரும் நடிகை சரோஜாதேவி தனது 87 ஆவது வயதில் உடல்நலக் குறைவு காரணமாக நேற்று இயற்கை எய்தியுள்ளார்.

இவர் 1955ஆம் ஆண்டு 'மகாகவி காளிதாசா' என்ற கன்னடத் திரைப்படத்தின்மூலம் சினிமாவில் அறிமுகமானார். அந்தத் திரைப்படத்தைத் தொடர்ந்து சிவாஜிகணேசனின் 'தங்கமலை ரகசியம்' படத்தில் நடித்தார் தமிழ் சினிமாவுக்குப் பரிச்சயமானார்.

இதைத் தொடர்ந்து எம்.ஜி.ஆருடன் இவர் நடித்திருந்த 'நாடோடி மன்னன்' திரைப்படத்தின் வெற்றி தமிழ்மக்களுக்கு இன்னும் இவரை நெருக்கமாக்கியது.

எம்.ஜி.ஆர், சிவாஜிகணேசன், ஜெமினி கணேசன் போன்ற தமிழ் சினிமாவின் ஆளுமைகள்பலருடனும்சரோஜாதேவி இணைந்து பணியாற்றியிருக்கிறார். தமிழ், தெலுங்கு, இந்தி, கன்னடம் என சுமார் 30 வருடங்களில், 160க்கும் மேற்பட்ட திரைப்படங்களில் கதாநாயகியாக நடித்த ஒரே நடிகை இவர்தான் என்ற பெருமையும் இவருக்கு உண்டு. இவர் தமிழில் கடைசியாக கே.எஸ்.ரவிக்குமார் இயக்கத்தில் சூர்யா நடித்திருந்த 'ஆதவன்' படத்தில் நடித்திருந்தார்.

இவருக்கு 1969ஆம் ஆண்டு பத்மஶ்ரீ விருது வழங்கப்பட்டது. இதைத் தொடர்ந்து 1992ஆம் ஆண்டு பத்மபூஷன் விருது வழங்கப்பட்டது. அத்தோடு தமிழக அரசின் கலைமாமணி விருதும் இவருக்கு வழங்கப்பட்டிருக்கிறது. சரோஜாதேவியின் மறைவுக்கு திரைப் பிரபலங்கள் பலரும் இரங்கல் தெரிவித்துவருகின்றனர். (ச-இ)

# வெள்ளை ஈ கட்டுப்பாடு செயற்றிட்டம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

இருவார கால தீவிர தேசிய களச் செயற்பாடு - 2025' என்னும் தொனிப்பொருளில் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்தும் தேசிய செயற்றிட்டத்தின் ஆரம்ப நிகழ்வு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பங்கேற்புடன் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் கச்சாயில் நேற்றுத் திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தென்னைப்பயிர்ச்செய்கை சபையின் ஏற்பாட்டில் சாவகச்சேரி, கோப்பாய், உடுவில், நல்லூர், யாழ்ப்பாணம் ஆகிய பிரதேசங்களில் நேற்று தொடக்கம் எதிர்வரும் 27ஆம் திகதிவரை குறித்த நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன. இதற்காக விவசாயிகளிடம் இருந்து ஒரு மரத்துக்கு நூறு ரூபா வீதம் அறவிடப்படவுள்ளது.

ஆரம்ப நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபன், தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தலைவர் மருத்துவர் சுனிமல் ஜெயக்கொடி, தென்னைப் பயிர் செய்கை சபையின் பொதுமுகாமையாளர் விஜயசிங்க, தென்னைப் பயிர்ச்செய்கைசபையின் உதவிப் பொது முகாமையாளர் ரி.வைகுந்தன், வடக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் திருமதி சு.செந்தில்குமரன், விவசாயப் பிரதி மாகாணப் பணிப்பாளர் திருமதி எஸ்.அஞ்சனாதேவி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (ச-28,113,66)



# வடக்குக் கடற்பரப்பில் சிவப்பு எச்சரிக்கை!

**சென்னை, ஜூலை 15**

சிலாபம் முதல் புத்தளம் ஊடாக மன்னார் வரையிலும், காலி முதல் அம்பாந்தோட்டை ஊடாகப் பொத்துவில் வரையிலும் உள்ள பகுதிகளுக்குப் பலத்த காற்று மற்றும் கடல் கொந்தளிப்புத் தொடர்பில் வளிமண்டலவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கையை விடுத்துள்ளது.

சிலாபம் தொடக்கம் புத்தளம் ஊடாக மன்னார் வரையான அத்துடன் காலி தொடக்கம் அம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பிராந்தியங்களில் மணித்தியாலத்துக்கு 50 முதல் 60 கிலோமீற்றரிலும் கூடிய வேகத்தில் அடிக்கடி காற்று அதிகரித்து வீசக் கூடும். இந்தச் சந்தர்ப்பங்களில் கடற்பிராந்தியங்கள் மிகவும் கொந்தளிப்பான நிலையில் காணப்படும். எனவே கடலுக்குச் செல்லும் மீனவர்களும் கடல்சார் ஊழியர்களும் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ச-இ)

# 922 கிலோ ஹெரோய்ன் மீட்பு

**கொழும்பு, ஜூலை 15**

இந்த ஆண்டின் இதுவரையான காலப் பகுதியில், பல்வேறு இடங்களில் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கைகளில், 922 கிலோகிராம் ஹெரோய்ன் மற்றும் ஆயிரத்து 386 கிலோகிராம் 'ஐஸ்' போதைப்பொருள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். அதேவேளை, 23 ரி-56 ரகத் துப்பாக்கிகளும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# அடுத்தாண்டில் இருந்து பாடவேளைகள் ஏழு!

கொழும்பு, ஜூலை 15

**அடுத்த ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் பாடசாலைப் பாட வேளைகளின் எண்ணிக்கை 8 இலிருந்து 7 ஆகக் குறைக்கப் படும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.**

இது தொடர்பில் கல்வி அமைச்சின் செயலாளர் நாலக காலுவேவா தெரிவித்துள்ளதாவது- நாடு முழுவதும் உள்ள அனைத்துப் பாடசாலைகளிலும் 2026 ஜனவரி முதலாம் திகதி முதல் கல்விச் சீர்திருத்தச் செயன்முறை தொடங்கும். இதில் ஒவ்வொரு பாடவேளையும் 50 நிமிடங்களாகத் திருத்தப்படும். அதற்கேற்ப அனைத்து வகுப்பறைக் கால அட்டவணைகளும் மறுசீரமைக்கப்படும். அதே வேளை இந்த ஆண்டு தரம் 1 மற்றும் தரம் 6 மாணவர்களுக்குக் கற்பிக்கும் ஒரு இலட்சம் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்க கல்வி அமைச்சு, தேசிய கல்வி நிறுவனம் மற்றும் மாகாணசபைகளுடன் இணைந்து திட்டமிட்டுள்ளது- என்றார். (ச-இ)

## முன்பிணை தாக்கல் செய்த ராஜித

கொழும்பு, ஜூலை 15

முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்ன முன்பிணை கோரி கொழும்பு நீதவான் நீதிமன்றத்தில் முன்பிணை மனு தாக்கல்செய்துள்ளார்.

தாக்கல்செய்யப்பட்ட மனுவை பரிசீலித்த கொழும்பு தலைமை நீதவான் தனுஜா லக்மாலி ஜெயதுங்க, இலஞ்ச ஒழிப்பு ஆணைக்குழுவுக்கு மனு அனுப்ப உத்தரவிட்டதுடன், வழக்கை எதிர்வரும் 18ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். கிரிந்த மீன்வளத் துறைமுகத்தில் மணல் அகழ்வுத் திட்டத்தை கொரிய நிறுவனத்துக்கு வழங்கியதன் மூலம் அரசாங்கத்துக்கு நிதி இழப்பை ஏற்படுத்தினார் என்று முன்னாள் அமைச்சர் ராஜித சேனாரத்னமீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (எ-இ)

## கடந்த 7 மாதங்களில் 68 துப்பாக்கிச்சூடுகள்

கொழும்பு, ஜூலை 15

கடந்த 7 மாதங்களில் நாடுமுழுவதும் 68 துப்பாக்கிச் சூட்டுச்சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அவற்றில் 37 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது. பொலிஸ் ஊடகப் பிரிவு கேட்போர் கூடத்தில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர், உதவிக் காவல்துறைக் கண்காணிப்பாளர் எ.ப்.யு. வுட்லர் நேற்று நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

50 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகளுடன் தொடர்புடையவை எனவும் ஏனைய 18 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் தனிப்பட்ட காரணங்களுக்காக நடத்தப்பட்டவை என்றும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 37 பேர் உயிரிழந்துள்ளனர், அவர்களில் 34 பேர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளிகள் என்று தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களில் 39 பேர் காயமடைந்துள்ளனர் என்றும் தெரிவித்தார். (எ-இ)




## ஓய்வுபெறவுள்ள பிரதம நீதியரசர்

கொழும்பு, ஜூலை 15

பிரதம நீதியரசர் முர்து பெர்னாண்டோ இந்த மாத இறுதியில் ஓய்வுபெறவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக சட்டமா அதிபர் திணைக்களத்தில் பணியாற்றிய முர்து பெர்னாண்டோ, 2024ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் இலங்கையின் 48ஆவது பிரதம நீதியரசராக நியமிக்கப்பட்டார். இவர் எதிர்வரும் 27ஆம் திகதி ஓய்வுபெறவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

அவரது ஓய்வை அடுத்து, இலங்கை அரசமைப்புசபையின் அனுமதியுடன், எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் ஜனாதிபதி பிரதம நீதியரசருக்கான பரிந்துரையை முன்வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. (எ-இ)

## பரீட்சைப் பெறுபேறு மீளாய்வுக்கு விண்ணப்பிக்கலாம்

கொழும்பு, ஜூலை 15

2024ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறு மீளாய்வுக்கான விண்ணப்பங்கள் நேற்று முதல் ஜூலை 28ஆம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. அதேவேளை, 2024ஆம் ஆண்டுக்கான பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் மொத்தம் 2 இலட்சத்து 37 ஆயிரத்து 26 மாணவர்கள் க.பொ.த. உயர்தரத்துக்குத் தகுதிபெற்றுள்ளனர் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.கே.எஸ். இந்திகா குமாரி தெரிவித்துள்ளார். (எ-இ)

## துமிந்தவுக்கு நிபந்தனையுடன் பிணை

கொழும்பு, ஜூலை 15

விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்கவுக்கு கடுமையான நிபந்தனைகளுடன் பிணை அனுமதி வழங்கப்பட்டுள்ளது. துமிந்தவை 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா ரொக்கப் பிணையிலும், தலா ஐந்து மில்லியன் ரூபா மதிப்புள்ள இரண்டு சரீரப் பிணையிலும் செல்ல கொழும்பு தலைமை உயர் நீதிமன்ற நீதிபதி மஞ்சுள திலகரத்ன அனுமதியளித்தார். ஹேவலாக் நகரில் உள்ள ஒரு சொகுசு வீட்டுவளாகத்தில் கண்டெடுக்கப்பட்ட தங்க முலாம் பூசப்பட்ட ரி -56 துப்பாக்கியின் உரிமை தொடர்பான விசாரணைகள் தொடர்பாக முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க கடந்த மே 23 அன்று கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். (ச-இ)



## காலம் முழுக்க இலுப்பம் பூவோ?

**ஆலையில்லா ஊருக்கு இலுப்பம்பூவைச் சக்கரையாப் பாவிக்கிறவை.ஆனால் எத்தினை நாளைக்குத்தான் ஆலை இல்லையெண்டு சொல்லி இலுப்பம்பூவையே பாவிக்கிறது? யாழ்ப்பாணம் முனிசிபலில ஆலையில்லை எண்டு சொல்லிச் சொல்லியே இலுப்பம்பூவை வைச்சே காலத்தை ஓட்டுகினம். தீயணைப்புவாகனம்தான் அந்தச் சக்கரை, தண்ணி பவுஸர்தான் இலுப்பம்பூ. வடக்கில யாழ்ப்பாணம் முனிசிபலிலதான் தீயணைப்பு வாகனம் சொந்தமா இருந்தது. தீயணைப்புபிரிவும் அந்த வாகனம் இருக்கேக்க எங்க நெருப்புப்பத்தினாலும் தீயா வேலை செய்து அதை நூர்த்துப்போட்டுத்தான் அடுத்தவேலை. அந்தத் தீயணைப்புவாகனம் இருந்ததால எத்தினையோ இடங்களில பத்தியெரிஞ்ச நெருப்பையெல்லாம் நூர்த்துப் பெரும் அனர்த்தங்கள் வராமல் பாத்தவை. அவ்வளவு ஏன், கிளிநொச்சி சந்தை முளாசி எரியேக்க யாழ்ப்பாணம் முனிசிபல் தீயணைப்புவாகனம்தான் அந்த இரவிலையும் பறந்துபோய், நெருப்பைப் பரவவிடாமல் பார்த்தது. அப்பிடிப்பட்ட தீயணைப்புவாகனம் என்டைக்கு நீர்வேலியில அப்பிடியே கவிண்டிச்சோ அண்டையோட எல்லாமே தலைகீழாப் போட்டுது.**

**இப்ப முனிசிபலில தீயணைப்பு வாகனத்துக்குப் பதிலா தண்ணி பவுஸரைக் கொண்டுபோய், அதுக்கு கொம்பிறேசரைப் பூட்டிப் பாவிக்கினம். ஆனால் என்ன இருந்தாலும் ஓரிஜினல் தீயணைப்பு வாகனம் மாதிரி வராதுதானே. சரி, இப்போதைக்கு இதுதானே இருக்குது. அதைவைச்சு சமாளிப்பம் எண்டும் மனதைத் தேத்தலாம் எண்டால் அதுக்கும் வழியில்லைப் போல. கிட்டடியில கல்லுண்டாய்வெளியிலயும், காரைக்காலிலையும் இருக்கிற குப்பைமேடுகள் பெரிசாப் பத்தியெரிஞ்சதெல்லோ. அந்தத் தகவல் கிடைச்சதும் இந்தத் தண்ணி பவுஸர் ஆடி அசைஞ்சபடி வாறதுக்குள்ள குப்பைமேட்டை நெருப்பு சுத்திவளைச்சிட்டுது. அதுக்குப் பிறகு ஒருமாதிரி கொம்பிறேசரைப் பூட்டி நெருப்புக்குத் தண்ணியடிச்சினம். ஆனால் கொஞ்சநேரத்திலேயே தண்ணி வாறது நிண்டிட்டுது. 'என்னடா இது, வழக்கத்தைவிட வேளைக்கே தண்ணி முடிஞ்சுது' எண்டு பார்த்தால், அந்த பவுஸர் வந்த பாதையெல்லாம் தண்ணி ஒழுகியிருக்கு. அந்த பவுஸரில ஓட்டை. அதாலதான் தண்ணி ஒழுகி, அரைவாசித் தண்ணியோட வந்திருக்குது.**

**இப்பிடியே இனியும் தீயணைக்கிறதுக்கு உந்த பவுஸரை நம்பியிருக்கிறது நல்லதில்லை. கிளிநொச்சி சந்தை எரிஞ்சபிறகு கட்டாயம் தங்கட இடத்துக்கெண்டு தனியா ஒரு தீயணைப்பு வாகனம் வேணுமெண்டு கரைச்சிப் பிரதேசசபை நிண்டதால இப்ப அங்க தீயணைப்பு வாகனம் இருக்குது. ஆனால் அந்தச் சந்தை எரியேக்க போய், தீயை அணைச்ச யாழ்ப்பாணம் முனிசிபல், இப்ப தீயணைப்பு வாகனம் இல்லாமல் ஓட்டை பவுஸரோட தீயணைக்கப் போற அளவுக்கு நிலைமை தலைகீழா மாறிட்டுது. இவ்வளவுநாளும் மக்களால தெரிவுசெய்யப்பட்ட நிர்வாகம் இல்லை எண்டு சொல்லி, தீயணைப்பு வாகனத்தை புதுசா வாங்கிறதில அக்கறை இல்லாமல் இருந்திட்டினம். இப்பதான் நிர்வாகம் வந்திட்டு, மேயர் வந்திட்டா, உறுப்பினர்கள் வந்திட்டினம். அவை மனம் வைச்சால் எல்லாமே நடக்கும். நடத்திக் காட்டுவினமோ?**

- பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தம், அந்நியோன்யம் அதிகரிக்கும். தந்தை வழி உறவினர்களால் வீண்செலவுகள் ஏற்படும். முக்கிய முடிவு ஒன்றை எடுப்பீர்கள். குடும்பத்தில் உறவினர்களால் ஏற்பட்ட குழப்பங்கள் நீங்கும். அசுவினி நட்சத்திரத்தில் பிறந்தவர்களின் புதிய முயற்சிகள் சாதகமாகும்.

**இடபம்:** வழக்கமான பணிகளில் மட்டுமே கூடுதல் கவனம் செலுத்தவும். சகோதரவகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். கொடுத்த கடன் திரும்பக் கிடைக்க வாய்ப்பு உள்ளது. எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் நீங்கும். உறவினர்களால் சில சங்கடங்கள் ஏற்படக்கூடும்.

**மிதுனம்:** உற்சாகமான நாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிக்கும் திறன் அதிகரிக்கும். பிள்ளைகளின் பிடிவாதப்போக்கு மாறி உங்கள் விருப்பப்படி நடந்துகொள்வார்கள்.

**கடகம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் வீண் செலவுகள் ஏற்படக் கூடும். வாழ்க்கைத்துணையுடன் அனுசரித்துச் செல்லவும். உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு இருக்காது. தாய்மாமன் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். ஆனால், உடல் ஆரோக்கியத்தில் சற்றுக் கவனம் தேவைப்படுகிறது. வாழ்க்கைத்துணையின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும்.

**கன்னி:** உற்சாகத்துடன் செயல்படும் நாள். இளையசகோதரவகையில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தந்தையின் தேவையை நிறைவேற்றும் வகையில் சற்று அலைச்சலும் சோர்வும் ஏற்படும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் ஏற்பட்ட பிரச்சினைகள் நீங்கும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும். சிலருக்கு நண்பர்கள்மூலம் மகிழ்ச்சி தரும் செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு உள்ளது.

**விருச்சிகம்:** குடும்பப் பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படும். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். வழக்கமான பணிகளில் பொறுமையுடன் செயற்படவும். வியாபாரத்தில் போட்டிகள் குறைந்து விற்பனை அதிகரிப்பது உற்சாகப்படுத்தும்.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பணப்புழக்கம் இருந்தாலும் திடீர்ச் செலவுகளால் கையிருப்புக் குறையக்கூடும். வாழ்க்கைத்துணைவழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகி முடியும்.

**மகரம்:** பல வகைகளிலும் அனுகூலமான நாள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசாங்கக் காரியம் அனுகூலமாக முடியும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிடமுடியும்.

**கும்பம்:** நீண்ட நாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். அக்கம்பக்கத்தில் இருப்பவர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டாலும் பாதிப்பு எதுவும் இருக்காது. வியாபாரத்தில் பணியாளர்களின் ஒத்துழைப்பு நன்றாக இருக்கும்.

**மீனம்:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். தாயின் தேவையை நிறைவேற்ற சிறிது அலைய வேண்டியிருக்கும். உடல்நலனில் கவனம் தேவை. வீட்டில் பொறுப்புகள் அதிகரிக்கும் என்பதால் சற்று சோர்வு உண்டாகும்.

# கா.பொ.த. சாதாரண தர பெறுபேறுகள்



## ஊற்றுப்புலம் அ.த.க. மாணவனுக்கு 9ஏ

### பாடசாலை வரலாற்றில் முதன்முறை

கிளிநொச்சி, ஜூலை 15

கிளிநொச்சி தெற்கு கல்விவலயத்தின் கரைச்சிக் கோட்டப் பாடசாலையான ஊற்றுப்புலம் அ.த.க. பாடசாலைக்கு முதல்முறையாக 9 ஏ பெறுபேறு கிடைத்துள்ளது. பாடசாலையில் கல்விகற்கும் மாணவன் ச.குயிலன் என்பவரே 9ஏ சித்திகளைப் பெற்று பாடசாலைக்கும், கிராமத்துக்கும், குடும்பத்துக்கும் பெருமைசேர்த்துள்ளார். (ச- 214,113)



## மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் முதல்முறை 9ஏ

யாழ்ப்பாணம், ஜூலை 15

வெளியாகிய க.பொ.த. சாதாரண பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய மாணவி ஜ.நிரோஜா பாடசாலை வரலாற்றில் முதல் முறையாக 9ஏ பெற்று பெருமை சேர்த்துள்ளார்.

மேலும் அதே பாடசாலை மாணவர்களான த.பிரணவி 7ஏ2பி, பு.தேனுஜன் 6ஏ பி 2சி, செ.ஆதீசன் ஏ 3பி 4சி, எஸ் சி.சியானா ஏ4பி3சி, எஸ் ஜீ.கலையரசன் ஏ2பி3சி 2எஸ் ஆகியோரும் சிறந்த பெறுபேற்றைப் பெற்றுள்ளனர். (ச)

## யா/ஒஸ்மானியா கல்லூரி

எம்.ஏ.என். அஹ்ரத் 3ஏ4பி2எஸ், எம்.ஏ.என். ரசாத் 2ஏபி5சிஎஸ், எம்.ஜே.எம். உசைத் ஏ3பி4சி எஸ், ஆர்.எம். றிலா ஏ3பி2சி 3எஸ், எம்.எஸ். இஷாத் 3பி3சி 3எஸ், எம்.ஏ.எம்.ஹதீம் 2பிசி6எஸ், ஏ.ஏ.எம்ஆகிஹ் பி 5சி 3எஸ், எம்.எச்.எம்.ஹனாஸ் 6சி3எஸ், எம்.என்.எம்.இஹ்தி 5சி3எஸ்.

## அளவெட்டி அருணோதய கல்லூரி

ம.அபிசயன் 9ஏ, க.கஜாகரன் 9ஏ, ர.குயிந்தன் 9ஏ, அ.எழில்வதனன் 9ஏ, ஒ.கீகன் 9ஏ, ல.மகிழன் 9ஏ, வை.யனுமி 9ஏ, து.வினுஷா 9ஏ, ஆ.அனுதர்சி 9ஏ, கு.கஜானா 8ஏபி, த.மபின்சன் 8ஏ பி, உ.பவித்திரன் 8ஏபி, சி.கோகிசன் 8ஏ பி, கோ.காருண்யா 7ஏ2பி, சி.துஷானி 7ஏ2பி, வ.சரன் 7ஏ2பி, வ.யானுசன் 7ஏ2பி

## உடுவில் மகளிர் கல்லூரி

மேரி சௌமியா டஸ்டன் தயாலெயன் 9ஏ, ஜாதவி திருக்குமரன் 9ஏ, குருசனா பத்மதீபன் 9ஏ, அஷ்விகா நந்தகோபன் 9ஏ, காருண்யா உமாசுதன் 9ஏ, டிலக்சிகா தவசுதன் 8ஏபி, இலக்கிய தர்மபாலன் 8ஏபி, அபிஷா ஜோகின் கலிஸ்ரஸ் 8ஏபி, பவஷாஜினி மங்களேஸ்வரன் 8ஏபி, ரக்சிகா பிரணவரூபன் 8ஏபி, தயானி சிவகரன் 8ஏபி, கிறிஸ்ரிகா ஜசோதரன் 8ஏபி, அஸ்வினி ரவீந்திரன் 8ஏபி, பிரித்திகா ஆண்டனி ஞானராஜ் 8ஏபி, கிருதிக்சா ஜெகநாதன் 8ஏபி, தர்மிளா கதிர்காமதாஸ் 8ஏசி, இஷானி நவகேதீஸ்வரன் 7ஏ2பி, ஆரபி செந்தில்நாதன் 7ஏ2பி, அபிராமி சிவகுமார் 7ஏ2பி, அக்சரா விக்னராஜா 7ஏ2பி, அக்சயா ரிச்சர்ட்ரேமன் 7ஏ2பி, புவிஷாலினி நித்தியானந்தன் 7ஏ2பி, ஆரவி கிரிதரன் 7ஏ2பி, அட்சயா மாவிரதன் 6ஏ3பி, ஜனார்த்தனி அற்புதராசா 5ஏ3பி சி



# வெளிநாட்டு சிகரெட்டுகளுடன் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 15

சட்டவிரோதமாக இந்தியாவிலிருந்து 700 சிகரெட்டுகளை கப்பல் மூலம் எடுத்துவந்த இலங்கையர் ஒருவர் நேற்றுமுன்தினம் காங்கேசன்துறையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுங்கத்துறை அதிகாரிகளது சோதனை முடிவடைந்த பின்னர் வெளியே வந்தவேளை யாழ்.மாவட்ட போதைப் பொருள் தடுப்புப் பொலிஸார் சந்தேகநபரைக் கைதுசெய்துள்ளனர்.

சந்தேகநபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (எ-41-27)

# மன்னார் - இராமேஸ்வரம் பயணிகள் கப்பற்சேவை!

## உயர்மட்டக் கலந்துரையாடல்

கொழும்பு, ஜூலை 15

நாகப்பட்டினம் காங்கேசன்துறை பயணிகள் கப்பல் சேவை போன்று தலைமன்னார் இராமேஸ்வரம் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை ஆரம்பிப்பது தொடர்பிலும் பரிசீலனை செய்யப்பட்டுள்ளது.

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் யாவுக்கும், கடற்றொழில் அமைச்சர் இமாமலிங்கம் சந்திரசேகருக்கும் இடையில் நேற்றுக் கலந்துரையாடல் இடம்பெற்றுள்ளது. இதன் போதே, தலைமன்னார் இராமேஸ்வரம் இடையிலான பயணிகள் கப்பற்சேவை தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை துறைமுகத்தை நவீனமாக்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் தயாராகிவிட்ட நிலையில் விரைவாக சரக்கு சேவைகளை ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்தும் இந்தச் சந்திப்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

இந்தியா உதவியில் நிர்மாணிக்கப்பட்ட கலாச்சார மத்திய நிலையத்தை ஒரு நம்பிக்கை நிதியத்தின் மூலம் முறையாக முகாமைத்துவம் செய்வது தொடர்பிலும், அச்சுவேலி தொழிற்துறை வலய நிர்மாணம் மற்றும் அதற்கு இந்திய முதலீட்டாளர்களின் ஒத்துழைப்புக்கள் கோரப்பட்டுள்ளமை குறித்தும் இந்தச் சந்திப்பில் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ம-66)

# மண்டலாபிஷேக பூர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

வண்ணை சாந்தையர்மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயத்தின் மண்டலாபிஷேக பூர்த்தி உற்சவம் நாளை புதன்கிழமை நடைபெறவுள்ளது. காலை 9மணிக்கு 108 சங்காபிஷேகம் மற்றும் பூஜை வழிபாடுகள் இடம்பெற்று நண்பகல் மகேஸ்வரர் பூஜையும் இடம்பெறும். தொடர்ந்து மாலை 6மணிக்கு சிறப்புப் பூஜைகள் இடம்பெற்று சுவாமி வெளிவீதி வலம் வருதல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை





நாளொரு நல்வார்த்தை

பழிவாங்குதல் வீரமன்று
பொறுப்பதே வீரம்.
– ஷேக்ஸ்பியர்–

# ஆபத்தின் வருகை!

பாகிஸ்தானின் இராணுவத் தளபதியான பீல்ட் மார்ல் அஷீம் முனீர் விரைவில் இலங்கைக்கு வரவிருக்கின்றார். ஜூலை மாதம் 21ஆம் திகதியளவில் அவர் இலங்கைக்கு வருவார் என்று அரச தரப்புத் தகவல்கள் வெளியாகியுள்ளன. இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான இராஜதந்திர ஒத்துழைப்பு மிகவும் நீண்டதாக இருந்தாலும், பாகிஸ்தானின் இராணுவத் தளபதி அஷீர் முனீர் தற்போது இலங்கைக்கு வருவது, தேவையற்ற பதற்றங்களை ஏற்படுத்தவே செய்யும். இன்னும் சொல்லப்போனால், 'வம்பை விலைகொடுத்து வாங்கும் கதையாக' அஷீம் முனீரின் பயணம் அமைந்தாலும் அதில் ஆச்சரியத்துக்கில்லை.


இந்தியாவின் காஷ்மீர் பிராந்தியத்தின் பஹல்காம் பகுதியில் ஏப்ரல் மாதம் பயங்கரவாதத் தாக்குதல்கள் இடம்பெற்றபின்னர், இந்தியாவுக்கும்பாகிஸ்தானுக்கும் இடையில் நேரடி மோதல்கள் வெடித்தன. 12 நாள்கள் இடம்பெற்ற இந்தப் போரின் தாக்கம் இன்றளவும் கனன்றுகொண்டுதான் உள்ளது. பஹல்காம் தாக்குதல்களுக்குத் தண்டனையாக, பாகிஸ்தானுடன் சிந்து நதியைப் பங்கிடுவதை இந்தியா நிறுத்தியுள்ளது. இதனால், தண்ணீரை அடிப்படையாக வைத்து இரு நாடுகளுக்கும் இடையில் மீண்டும் போர்ப் பதற்றம் வலுத்து வரும் நிலையில், இராணுவத் தளபதி அசீம் முனீர் இந்தியாவை வெளிப்படையாகக் கண்டித்தும் அச்சுறுத்தியும் வருகின்றார்.

அத்துடன், இந்தியாவுக்கு எதிராக உலக நாடுகளை ஓரணியில் இணைக்கும் நடவடிக்கைகளையும் அசீம் முனீர் மேற்கொண்டுள்ளார். அமெரிக்கா, சீனா, துருக்கி, ஈரான் ஆகிய நாடுகளுக்கு சமீபத்தில் அவர் பயணம் மேற்கொண்ட நிலையில், இதன் தொடர்ச்சியாகவே, தற்போது அசீம் முனீரின் இலங்கைப் பயணம் அமையவுள்ளது. இலங்கைப் பயணத்தை முடித்துக்கொண்டு, ஆசிய வட்டகையில் சீனாவின் செல்லப்பிள்ளையாக மாறிவரும் மாலைதீவுக்கும் அசீம் முனீர் செல்லவுள்ளார். ஆக, பாகிஸ்தான் இராணுவத் தளபதியின் பயணம் வெளியில் தெரியும் விடயங்களுக்கு அப்பால், ஆழமான நோக்கங்களையும் ஆபத்துகளையும் கொண்டது என்பது அப்பட்டமாகப் புலப்படுகின்றது.

வர்த்தகச்சமநிலையற்ற தன்மையாலும், வரிப்போர்களாலும் இன்று இலங்கை பொருளாதாரத் தளம்பலடைந்து வருகின்றது. மீண்டும் இந்தியாவின் கைகளைப் பிடித்து மேலெழும்ப வேண்டிய தேவை இலங்கைக்கு ஏற்படலாம். அதற்குரிய சாத்தியங்கள் அதிகமாகவே காணப்படுகின்றன. அத்துடன், வெளிநாடுகளில் ஏதேனும் அசம்பாவிதங்கள் இடம்பெற்றால், உடனடியாக உதவும் அயலானாக இந்தியா காணப்படுகின்றது. எல்லாவற்றையும்விட, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தங்கள் நடைமுறையில் உள்ளன. இவை அனைத்தையும் ஒருசேர வைத்துப் பார்த்தால் பாகிஸ்தான் இராணுவத் தளபதி அசீம் முனீரின் இலங்கைப் பயணம் எவ்வளவு பாரதூரமான பதற்றங்களை ஏற்படுத்தக்கூடியது என்பது புலப்படும்.

'இலங்கையின் நிலப்பரப்பை இந்தியாவுக்கு எதிராக எவரும் பயன்படுத்த அனுமதிக்கப் போவதில்லை' என்ற வாக்குறுதியை, இந்தியாவிடம் திட்டவட்டமாக அநுர அரசாங்கம் வழங்கியிருக்கின்றது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், அந்த ஒற்றை வாக்குறுதியால், இந்த அத்தனை பதற்றங்களும் அஸ்தமித்துப் போகும் என எண்ணினால், அது முட்டாள்தனத்தின் உச்சமே.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




# சொத்து விவரம் சமர்ப்பிக்காத அதிகாரிகளுக்கு இனித் தண்டம்



கொழும்பு, ஜூலை 15

**சொத்து மற்றும் பொறுப்புப் பிரகடனங்களைச் சமர்ப்பிக்காத அரசாங்க அதிகாரிகளுக்கு தண்டம் விதிக்குமாறு அனைத்து அரச நிறுவனங்களின் தலைவர்களுக்கும் இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழு அறிவித்துள்ளது. புதிய ஊழல் தடுப்புச் சட்டத்தின்படி இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

தண்டம்விதிக்கும்நடைமுறைநேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.
சொத்து மற்றும் பொறுப்பு அறிவிப்புகளை சமர்ப்பிக்கவேண்டிய அரச அதிகாரிகள், ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 31ஆம் திகதிய நிலைவரப்படி தங்கள் சொத்துகளின் விவரங்களை ஜூன் 30ஆம் திகதிக்கு முன்னர் தங்கள் நிறுவனத் தலைவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்காத அரச அதிகாரிகளுக்கு மேலும் இரு வாரங்கள் அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. அந்த அவகாசமும் முடிவடைந் துள்ள நிலையில், சொத்து மற்றும் பொறுப்பு அறிக்கைகளை சமர்ப்பிக்காத அரச அதிகாரிகளின் ஒவ்வொரு நாளுக்கும் முப்பதில் ஒரு பங்கு சம்பளத்தைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-இ)

# பஸ் விபத்தில் நால்வர் காயம்




கொழும்பு, ஜூலை 15
மஹரகம, நாவின்னப் பகுதியில் நேற்றுக் காலை நடந்த பஸ் விபத்தில் நால்வர் காயமடைந்துள்ளனர். நாவின்ன பஸ் நிறுத்தத்திலிருந்து பிரதான வீதிக்குள் நுழைந்த பஸ், மஹரகமவிலிருந்து கொழும்பு நோக்கி பிரதான வீதியில் பயணித்த மற்றொரு பஸ்ஸுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.
இந்தச் சம்பவம் தொடர்பாக மஹரகமப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (எ-இ)

# இலஞ்சம் பெற்ற பொலிஸூக்கு கடூழியச் சிறை

கொழும்பு, ஜூலை 15
இலஞ்சம் பெற்ற முன்னாள் துணைப் பொலிஸ் அத்தியட்சகர் ஒருவருக்கு 14 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.
கடந்த 2018ஆம் ஆண்டு ஆயுள்வேத மசாஜ் நிலையம் ஒன்றை இடையூறின்றி நடத்திச் செல்வதற்காக நிலையத்தின் உரிமையாளரிடம் 30 ஆயிரம் ரூபாவை இலஞ்சமாகப் பெற்றுள்ளார். இலஞ்சம் பெற்றுக்கொண்டமை உள்ளிட்ட 6 குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் குறித்த அதிகாரிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. நீண்டவழக்கு விசாரணையின் பின்னர் அவருக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



# துப்பாக்கிகள் வைத்திருந்த ஒருவர் கைது

கொழும்பு, ஜூலை 15
அநுராதபுரம், திறப்பனைப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஏறுவெவப் பிரதேசத்தில் இரண்டு துப்பாக்கிகளுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார். திறப்பனை பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பிலேயே சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார். (எ-இ)



# வெற்றிலை, பாக்கு விலை அதிகரிப்பு!

சந்தையில் வெற்றிலை, பாக்கின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதாக விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர். இதன்படி, பெரிய வெற்றிலை ஒன்று 10 ரூபாவுக்கும், சிறிய வெற்றிலை ஒன்று 7 ரூபாவுக்கும் விற்பனை செய்யப்படுகின்றது. அத்துடன் பாக்கின் விலையும் அதிகரித்துள்ளது. விலை அதிகரிப்பால் வெற்றிலை மற்றும் பாக்கு விற்பனை குறைவடைந்துள்ளதாகவும் விற்பனையாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-இ)

நாளை
புதன்கிழமை - ஆனி 31
16.07.2025
சுபநேரம் : 04.30 06.00
ராகுகாலம் :12.00- 01.30

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்து ஆட்சி மொட்டுக்கட்சியே

கூறுகிறார் சாகர

கொழும்பு, ஜுலை 15

அடுத்து ஆட்சியைப் பிடிக்கப்போவது மஹிந்தவின் குடும்பம்தான். அதனாலேயே இந்த அரசு மஹிந்தவின் குடும்பத்தைக் கண்டு அஞ்சுகிறது என்று மொட்டுக் கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாடாளுமன்றத் தேர்தலில் 2.5 வீதமாக இருந்த எமது வாக்குவங்கியை 10 வீதமாக உயர்த்தியுள்ளோம். மக்களின் நம்பிக்கையை வென்ற கட்சியாக நாமே உள்ளோம். மஹிந்தவின் குடும்பம் இப்போது மக்களின் நம்பிக்கையை வென்று வருகிறது. நாங்கள் குற்றச்சாட்டுகளைக் கண்டு அஞ்சவில்லை. எல்லாவற்றையும் எதிர்கொள்ள நாம் தயார். எல்லாமே உருப்படியற்ற குற்றச்சாட்டுகள். கடந்த காலங்களில் சாட்சிகள் இல்லாமல் ஒதுக்கப்பட்ட மஹிந்த குடும்பத்துக்கு எதிரான வழக்குகளை மீண்டும் விசாரணைக்கு எடுத்துள்ளார்கள். நீதிபதிகளுக்கு அழுத்தம் கொடுத்து எம்மை சிறையில் தள்ளவேண்டாம். நாம் நிச்சயம் ஆட்சியைப் பிடிப்போம் கடந்த காலங்களில் எங்களது ஆட்சியில் நாங்கள் செய்த பிழையை இனி செய்யமாட்டோம்.- என்றார். (ச-75)

# ஐ.ம.ச. தலைமையில் மாற்றம் ஏற்படாதாம்

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப்பதவியில் மாற்றம் வராது. மாகாணசபைத் தேர்தலின் போது கட்சி மீண்டெழும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பி பெரேரா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவராக சஜித் பிரேமதாஸ செயற்படுகின்றார். அதில் மாற்றம் வராது. நாடாளுமன்றத் தேர்தலை விடவும் உள்ளூராட்சிசபைத் தேர்தலில் சிறந்த பெறுபேறு கிட்டியுள்ளது. மாகாணசபைத் தேர்தலில் தனிக்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி மீண்டெழும். மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் அஞ்சுகின்றது.

தோல்விப் பயத்தால் அதனைப் பிற்போடுவதற்கு முற்படுகின்றது.

எனினும், தேர்தலை நடத்துமாறு சர்வதேச மற்றும் சமூக அழுத்தங்கள் வரக்கூடும் - என்றார். (எ-44)


## ஏழாம் ஆண்டு திதி நினைவஞ்சலி

தோற்றம் 12 . 03 . 1925



மறைவு 03 . 07 . 2018

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மற்றும் அன்னசத்திர ஒழுங்கையை வசிப்பிடமாகவும் கொண்ட

**அமரர் வேலுப்பிள்ளை செல்லத்துரை**

எமது குடும்பத்தலைவர் எம்மைவிட்டுப் பிரிந்து ஆறு ஆண்டுகள் கடந்துவிட்ட போதும் அவரின் நினைவுகள் என்றும் நீங்காமல் எமது நெஞ்சங்களில் நிழலாடிக்கொண்டே இருக்கின்றன.

**குடும்பத்தலைவரின் சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.**

**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் மற்றும் குடும்பத்தினர்**

## பொது அறிவித்தல்
## வலிகாமம் வடக்கு பிரதேச சபை
## காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)

**கீரிமலையில் ஆடி அமாவாசை தினத்திற்கான (24.07.2025) தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்கல் மற்றும் பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்களை பதிவு செய்தல்**

**1. தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்கல்**

கீரிமலையில் ஆடி அமாவாசை தினத்திற்கான உற்சவகால தற்காலிக வியாபார நிலையங்கள் அமைப்பதற்கான இடங்களை ஏலத்தில் வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. பகிரங்க ஏலத்தில் பங்குபற்ற விரும்புபவர்கள் எதிர்வரும் 18.07.2025 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக தெல்லிப்பளை உப அலுவலகத்தில் ரூபா200.00 கட்டணம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை பெற்றுக்கொள்ளலாம். பகிரங்க ஏலம் 21.07.2025ம் திகதியன்று (திங்கட்கிழமை) முற்பகல் 9.30 மணிக்கு கீரிமலை பேரூந்து நிலைய முன்றலில் நடைபெறும்.

**குறிப்பு:**

- சித்திபெற்ற கேள்விதாரர்கள் உடனடியாகவே அதற்கான குத்தகைப்பணம் முழுவதையும் செலுத்துவதுடன் வியாபார உரிமத்தினையும் பெற்றுக்கொள்ளவேண்டும்.
- ஆலய சுற்றாடலில் உள்ள நிரந்தரக் கடைகளும், உற்சவ காலத்துக்குப் பிரதேச சபையால் வழங்கப்படும் கடைகளும் தவிர வேறு கடைகள் தனியார் காணிகளிலோ அல்லது தனிப்பட்ட இடங்களிலோ சபையின் அனுமதியின்றி வியாபாரம் மேற்கொள்ள முடியாது.
- உணவு கையாளும் நிலையங்கள் சுகாதார வைத்திய அதிகாரியினால் வழங்கப்படும் அனுமதியினைப் பெற்றுக் கொண்ட பின்னரே வியாபாரம் மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

**2. பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்கள் பதிவு செய்தல்**

பிதிர்க்கடன் கிரியைகள் மேற்கொள்ளும் சிவாச்சாரியார்கள் 21.07.2025ம் திகதி மு.ப 11.00மணி தொடக்கம் பி.ப 3.00மணி வரையும் 22.07.2025 திகதி மு.ப 9.00மணி தொடக்கம் பி.ப 3.00மணி வரையான காலப்பகுதியில் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் கீரிமலை புனித தீர்த்தக்கரை அலுவலகத்தில் படிவ கட்டணமாக ரூபா 200.00ம் இடவரி கட்டணம் ரூபா3000.00 இனை செலுத்தி தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

- பதிவுகள் மேற்கொள்ள வரும் சிவாச்சாரியார்கள் தங்களுக் குரிய பதிவு செய்யப்பட்ட சிவாச்சாரிய அடையாள அட்டை சமர்ப்பிப்பது கட்டாயமானது.
- மேலும் எம்மிடம் பதிவுகள் மேற்கொள்ளாத சிவாச்சாரியார்கள் ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலை புனித பிரதேசத்தில் பிதிர்கடன் கிரியைகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

**சோ.சுகிர்தன்**
**தவிசாளர்**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**0212244180** **15.07.2025**

## பணிப்பெண் தேவை

யாழ் நகரில் உள்ள வீட்டில் தங்கிவேலை செய்வதற்கு பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**076 890 4501**

## உடுவில் ஸ்ரீ சிவஞான விநாயகர் கோவில்


ஆலயத்தின் ஆதீன கர்த்தாவும், பிரதம குருவுமாகிய நான் இதுவரை காலமும் ஆலயத்தின் நித்திய, நைமித்திய கைங்காரியங்களை செய்துவந்துள்ளேன். சில இடர்பாடுகள் காரணமாக கைங்காரியங்களை செய்வதில் சிரமமாக உள்ளமையால் ஆலயத்தின் பங்குதாரர்கள் இன்றிலிருந்து 15 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

**சிவ ஸ்ரீ வெ.சுப்பிரமணிய குருக்கள்**
**ஆதீனகர்த்தா**
**உடுவில் சிவஞான விநாயகர் கோவில்**
**077 590 8538**

**மானிப்பாய் வீதி, உடுவில்.**

## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 14 . 11 . 1954



மறைவு 08 . 07 . 2025

**தவவிநாயகம் சந்திரகுமார்**

**(உரிமையாளர் - Kumar Shop - பிரான்ஸ்)**

அவர்கள் காலமானதை அறிந்து ஆழ்ந்த துயரடைவதோடு அன்னாரின் பிரிவால் துயரிற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கல்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்..

**வினோ நகைப்பூங்கா ஸ்தாபனம்**
**177, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(CR/58861) J-1


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




யாழ் ஐரி ஹப், பாடசாலை மாணவர்களிடையே கடந்த மாதம் 21ஆம் திகதி யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் நடத்திய ரோபோடிக் புதுமைப் போட்டியில் வலய மட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கான மாகாணமட்டப் போட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது. அதில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மாணவன் ஆர்.என்.ஹேமோஸ் "அறிவியலின் பயன்பாடு" எனும் கருப்பொருளில் முதலாம் இடத்தையும் ஏ.றேனுஜன் "மொபைல் பயன்பாடு" எனும் கருப்பொருளில் விசேட விருதையும் பெற்றுக்கொண்டனர். (எ-41-20)






# குருதிக்கொடை முகாம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கத்தின் 80ஆவது அமுதவிழாவை முன்னிட்டு வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கம், வல்வெட்டித்துறைப் பிரதேச மருத்துவமனை ஆகியன இணைந்து வல்வை 21 நண்பர்கள், வல்வை 1977 லண்டன் நண்பிகள், நலன்விரும்பியொருவர் ஆகியோரின் அனுசரணையில் நடத்திய மாபெரும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை வல்வெட்டித்துறை நெடியகாடு கணபதி மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. வல்வெட்டித்துறை இரத்ததானச் சங்கத் தலைவர் பாலச்சந்திரமூர்த்தி வீரசுரேந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத் தவிசாளர் திருமதி.தவமலர் சுரேந்திரநாதன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார். நிகழ்வில் 15 பெண்கள், 59 ஆண்கள் என 74 பேர் மிகவும் ஆர்வத்துடன் கலந்துகொண்டு குருதிக்கொடை வழங்கினர். குருதிக் கொடை வழங்கிய அனைவருக்கும் ஊக்குவிப்புப் பரிசில்கள் வழங்கப்பட்டன. (எ-41-66)



வரலாற்றுப் புகழ்மிக்க கதிர்காமக்கந்தன் ஆலய ஆடிவேல் விழாவை முடித்துவரும் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி முருகனை வரவேற்கும் உற்சவம் கடந்த வெள்ளிக்கிழமை செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெற்றது. (எ-41-66)



தொல்புரம் வழக்கம்பரை அம்மன் ஆலய வருடாந்தத் தேர் உற்சவம் கடந்த புதன்கிழமை பக்தர்கள் புடை சூழ பக்திபூர்வமாக இடம்பெற்றது. (ச-63)

# நாவல் அறிமுக விழா



யாழ்ப்பாணம், ஜூலை 15

இயல் விருதுபெற்ற எழுத்தாளர் இரவி அருணாச்சலம் எழுதிய "பம்பாய் சைக்கிள் நாவல்" அறிமுக விழா ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் விந்தன் தலைமையில் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள எங்கடபுத்தகங்கள் இல்லத்தில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. நிகழ்வில் ஆய்வாளரும் விமர்சகருமான சி.ரமேஷ் நூலின் ஆய்வுரையையும், ஆய்வாளரும், விமர்சகருமான சி.விமலன் நாவலின் நயப்புரையையும், மூத்த எழுத்தாளர் அ.யேசுராசா வாசகர் சார்பில் விமர்சனஉரையையும், நூலாசிரியர் இரவி அருணாச்சலம் ஏற்புரையையும் நிகழ்த்தினர். தொடர்ந்து வாசகர்களின் கருத்துப் பகிர்வுகளும் இடம் பெற்றன. இந்திய அமைதிப்படை என்கிற பெயரில் ஈழத்தில் காலடி வைத்த இந்திய இராணுவம் தமிழ் மக்கள்மீது புரிந்த படுகொலைகள் தொடர்பான பல்வேறு விடயங்கள் இந்த நூலில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன. (எ-41-66)

# மாற்றுத்திறனாளிகள் பிரச்சினை தொடர்பான கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஜூலை 15

கிளிநொச்சி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட மாற்றுத்திறனாளிகள் சங்க அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் சுகத் வசந்த டி சில்வா தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், "க்ளீன் சிறீலங்கா" திட்டத்தின்மூலம் மாற்றுத்திறனாளிகளின் வசதிகளை மேம்படுத்தல், பொதுப் போக்குவரத்து மற்றும் பொது இடங்களில் அரசாங்கத்தின் எதிர்காலத் திட்டங்கள் ஆகியன தொடர்பாகத் தெளிவுபடுத்தப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட விழிப்புலனற்றவர்களுக்கு நிகழ்வில் வெள்ளைப் பிரம்பும் வழங்கப்பட்டது.

கலந்துரையாடலில் தேசிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி மாவட்ட அமைப்பாளர் மருங்கன் மோகன், கட்சியின் மூத்த உறுப்பினர் இளையதம்பி கணேசபிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-113)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க வரிச் சிக்கலுக்கு அரசாங்கத்தின் தீர்வு என்ன?

## எதிர்க்கட்சித் தலைவர் கேள்வி

கொழும்பு, ஜூலை 15

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் இலங்கையிலிருந்து அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படும் சகல பொருள்களுக்கும் 30 வீத பரஸ்பர தீர்வை வரியை விதித்துள்ளார். இது நாட்டின் ஏற்றுமதிகளின்மீது கடுமையான எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். இதை அரசாங்கம் எவ்வாறு எதிர்கொள்ளப்போகிறது? என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கேள்வியெழுப்பியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்த வரி விதிப்பு ஆடை, தேயிலை, இறப்பர், தகவல் தொழில்நுட்பம் மற்றும் மீன்பிடித் துறைகளுக்குக் கடுமையான எதிர்மறையான தாக்கத்தைக் கொண்டுவரும்.

நாட்டின் ஏற்றுமதியில் 26.4 சதவீதப் பங்களிப்பைப் பெற்றுத்தரும் ஏற்றுமதித் தளமாக அமெரிக்கா உள்ளது. 2024ஆம் ஆண்டில் எமது நாட்டின் ஏற்றுமதி மதிப்பு 3.8 பில்லியன் டொலராகும். 30 சதவீத தீர்வைவரி விதிக்கப்படுவதால் ஏற்றுமதி வர்த்தகம் கடுமையான நெருக்கடிகளை எதிர்கொள்ளும்.

தற்போதைய அரசாங்கம் இந்தப் பிரச்சினைக்குச் சிறந்த தீர்வைக் காண தன்னால் முடிந்த அனைத்தையும் செய்திருக்கிறதா என்ற கேள்வி எம்மத்தியில் காணப்படுகின்றது. இரு நாடுகளுக்கும் இடையில் பேச்சு நடத்தி பின்பற்றவேண்டிய ஒழுங்குகள் சரியாகப் பின்பற்றப்பட்டதா என்பதிலும் பிரச்சினை இருக்கிறது. இந்தப் பிரச்சினைக்கு அரசாங்கம் வழங்கும் பதில்களும் தீர்வுகளும் என்ன? இந்தப் பிரச்சினைக்கான தெளிவான தீர்வை அரசாங்கத்திடமிருந்து அறிந்து கொள்வது எமக்கு முக்கியமானது - என்றார். (எ-இ)

## மரண அறிவித்தல்

பிறப்பு 13 01 1962



இறப்பு 12 07 2025

### திருமதி. மனோகரா நடராசா

மாசார் பளையை பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மனோகரா நடராசா (ஓய்வு பெற்ற பட்டதாரி ஆசிரியர் - கொழும்பு இந்து மகா வித்தியாலயம், கிளி / செந்திரேசா மகளிர் கல்லூரி, கிளி / பரந்தன் இந்து மகா வித்தியாலயம்) அவர்கள் 12.07.2025 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சிவபாக்கியத்தின் பாசமிகு மகளும், நடராசாவின் மனைவியும், சர்வதன் (கனடா), பிரணவன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சௌமியா (கனடா)வின் அன்பு மாமியாரும், லீலாதேவி, மகாலிங்கம், தர்மலிங்கம், வசுந்திரா, சறோஜா தேவி, தேவராசா, தவராசா, தவராணி, தயாளினி, றாஜினி, சுபாஸ்கரன் மற்றும் சுபாஜினி ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற சிதம்பர நாதன், கலா, கலைவாணி, சந்திர சேகரம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 15.07.2025 செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை கல்கிசை மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 16.07.2025 புதன்கிழமை பகல் 12.30 மணியளவில் கிரியைகள் நடைபெற்று பிற்பகல் 3.00 மணிக்கு தகனக் கிரியைகளுக்காக கல்கிசை பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

**இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.**

தகவல்: குடும்பத்தினர்
பிரணவன்– 0778303423 / சர்வதன்– 0014169302275

## கண்ணீர் அஞ்சலி

### ஸ்ரீமதி விசாலாக்ஷி பாலகுமார்



சுழிபுரம் பறாளாய் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பரம்பரை அர்ச்சகர் சிவஸ்ரீ.சி.பாலகுமார் குருக்கள் அவர்களின் அன்பு மனைவி ஸ்ரீமதி விசாலாக்ஷி பாலகுமார் அவர்கள் (இந்தியா) சென்னையில் (08.07.2025) அன்று இறைபதம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல பறாளாய் முருகனை பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

சுழிபுரம் பறாளாய் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோவில் தர்மகர்த்தா சபையினர்.

## ஆடிப்பிறப்பு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை கவின் கலைமன்றம் முன்னெடுக்கும் ஆடிப்பிறப்பு விழா நாளை புதன்கிழமை காலை 8.30 மணி யளவில் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் கலாசாலையின் முதல்வர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் சிறப்புற இடம்பெறவுள்ளது. நிகழ்வில் கலாசாலையின் பழைய மாணவியும், கலைக் கோயில் நாட்டியப் பள்ளியின் இயக்குனருமான கலாபூஷணம் பத்மினி செல்வேந்திரகுமார் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். தென்னாடு செந்தமிழ் ஆகம சிவமடப் பத்திராதிபர் ஜீவா சஜீவன் அதிதிப் பேச்சாளராகக் கலந்துகொள்வார். (ச-66)

## மரண அறிவித்தல்



### நடராசா சிவபாலகணேசன்

**(தேசிய சேமிப்பு வங்கியின் ஓய்வு பெற்ற பிரதிப் பொது முகாமையாளர்)**

மகாதனை தெல்லிப்பளையை பிறப்பிடமாகவும், உடுவில் கிழக்கு சுன்னாகத்தை வதிவிடமாகவும் கொண்ட திரு. நடராசா சிவபாலகணேசன் அவர்கள் நேற்று (14.07.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - மீனாட்சிப்பிள்ளை தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான காசியர் - சீவரத்தினத்தின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்பு கணவரும், யாஹரன் (தவத்திரு வேலன் சுவாமிகள்), யாழினீஸ்வரி (அவுஸ்திரேலியா), சிவவல்லி, தங்காகரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், துஷ்யந்தன், சாரங்கா ஆகியோரின் மாமனாரும், டிலாந்தன், தக்ஷிகா ஆகியோரின் பாசமிகு அம்மப்பாவும், காலஞ்சென்ற அம்பிகாபதியம்பாள், பூரணம், பரமேஸ்வரி, காலஞ்சென்ற செல்வநாயகம், காலஞ்சென்ற பாலகணேசன், மங்கையற்கரசி ஆகியோரின் அருமை சகோதரரும், காலஞ்சென்ற விக்கினேஸ்வரன், ஜீவதாசன் (சுவிஸ்), காலஞ்சென்ற முதலித்தம்பி, காலஞ்சென்ற கந்தசாமி, காலஞ்சென்ற சோமசுந்தரம், காலஞ்சென்ற யுவதி, பத்மாவதி, சுரேந்திரநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.07.2025) புதன்கிழமை பிற்பகல் 01.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மருதனார்மடம் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உடுவில் கிழக்கு,
சுன்னாகம்.**

**தகவல் :
குடும்பத்தினர்
077 507 7432**

## மரண அறிவித்தல்



### ஆறுமுகம் சிவசுப்பிரமணியம்

நீர்வேலி மேற்கு கரந்தனைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் சிவசுப்பிரமணியம் அவர்கள் நேற்று (14.07.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-இளையபிள்ளை தம்பதியின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சதாசிவம்-இராசம்மா தம்பதியின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற சந்திராதேவி அவர்களின் அன்பு கணவரும், நளாயினி (இத்தாலி), தமயந்தி (லண்டன்), சுபாகினி (ஆசிரியை-உரும்பிராய் சந்திரோதய வித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரவிக்குமார், சிறிகாந்தன், தர்மிந்தன் ஆகியோரின் அன்பு மாமனாரும் சிவபாக்கியம், சிவஞானம், காலஞ்சென்றவர்களான சிவனேஸ்வரி, சிவபாதம் மற்றும் சிவலோகநாதன், சிவகுமார் ஆகியோரின் அன்புச் சகோதரரும் மதுமிதன், கவிமித்ரா, ஹரிசரண், நிவேதன், தாரகன், பூர்விகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.07.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நீர்வேலி சீயக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**நீர்வேலி தெற்கு,
நீர்வேலி.**

**தகவல்:
குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் புலனாய்வுப் பிரிவை கலைக்கின்றது பங்களாதேஷ்?



டாக்கா, ஜூலை 15

**பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கம், நாட்டின் இராணுவப் புலனாய்வுப் பிரிவைக் கலைக்க நடவடிக்கை எடுத்துள்ளது என்று வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.**

பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கத்தின் தலைவரான முகமது யூனுஸின் முடிவின் அடிப்படையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானைப் போன்ற ஒரு தீவிர இஸ்லாமிய நாடாக நாட்டை மாற்றுவதே பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கத்தின் குறிக்கோள் என்றும் வெளிநாட்டு ஊடகங்கள் குறிப்பிட்டுள்ளன.

பங்களாதேஷின் இடைக்கால அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் வலுவான கவனத்தை ஈர்த்துள்ளது.

இந்த நடவடிக்கை ஆயுதப்படைகளை பலவீனப்படுத்தி நாட்டில் ஜனநாயகத்தை நசுக்கும் திட்டத்தின் ஒரு படி என்று எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது என்று வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இராணுவப் புலனாய்வுச் சேவையை கலைப்பதன்மூலம் பங்களாதேஷ் சர்வதேச பயங்கரவாதத்துக்கான கதவுகளைத் திறந்துவிட்டுள்ளது என்றும் அந்தநாட்டின் எதிர்க்கட்சிகள் குற்றம் சாட்டியுள்ளன. (எ-இ)



## நைஜீரிய முன்னாள் ஜனாதிபதி மறைவு

லண்டன், ஜூலை 15

நைஜீரியாவின் முன்னாள் ஜனாதிபதி முகமது புஹாரி தனது 82ஆவது வயதில் காலமானார். லண்டனில் சிகிச்சை பெற்றுவந்த இவர் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளார்.

இவர் இரண்டு தடவைகள் இராணுவத் தலைவராகவும், ஜனநாயக ஜனாதிபதியாகவும் நைஜீரியா நாட்டை வழிநடத்தியவர். புகாரியின் உடலை லண்டனில் இருந்து சொந்த நாட்டுக்குக் கொண்டு வருவதற்கு துணை ஜனாதிபதி டினுபு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (எ-இ)


## சிறிய ரக விமானம் பிரிட்டனில் விபத்து

லண்டன், ஜூலை 15

பிரிட்டனில் சிறிய ரக விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது. அதில் பயணித்தவர்களின் நிலைமைகள் தொடர்பாக தகவல்கள் வெளியாகவில்லை.

லண்டன் சவுத் எண்ட் விமான நிலையத்தில் இருந்து நெதர்லாந்து நோக்கிப் புறப்பட்ட விமானமே விபத்துக்குள்ளாகியுள்ளது.

விமான விபத்துக்குப் பின்னர் லண்டன் சவுத்எண்ட் விமானநிலையம் மூடப்பட்டதோடு, அனைத்து விமானங்களும் இரத்துச் செய்யப்பட்டன. (எ-இ)



## ரஷ்ய உளவாளிகள் இருவர் உக்ரைனில் சுட்டுக்கொலை

கீவ், ஜூலை 15

ரஷ்ய உளவாளிகள் இருவர் உக்ரைன் தலைநகரில் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

உக்ரைனின் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த முக்கியமான அதிகாரியான இவான் வொரொனிச் கைத்துப்பாக்கி மூலம் கடந்த 10 ஆம் திகதி சுட்டுக்கொல்லப்பட்டார். அந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தனர் எனக் கருதப்படும் ஆணும் பெண்ணுமே இப்போது சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

உக்ரைன் பாதுகாப்பு சேவையைச் சேர்ந்தவர்கள் இவர்களைக் கைதுசெய்ய முயன்றவேளை இடம்பெற்ற மோதலில் இருவரும் கொல்லப்பட்டுள்ளனர். (எ-இ)

## அந்தமான் கடலில் நில அதிர்வு

நியூயோர்க், ஜூன் 15

அந்தமான் கடற்பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை 4.7 ரிக்டர் அளவில் நில அதிர்வு பதிவாகியுள்ளது.

நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் தொடர்பான விவரங்கள் வெளியாகவில்லை. (எ-இ)

## உக்ரைனுக்கு நவீன ஆயுதம் வழங்குகின்றது அமெரிக்கா

நியூயோர்க், ஜூலை 15

உக்ரைனுக்கு அமெரிக்கா அதிநவீன ஆயுதங்களை வழங்கவுள்ளது என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

பல வகையான நவீன தொழில்நுட்ப ஆயுதங்களை நாங்கள் உக்ரைனுக்கு அனுப்பவுள்ளோம். புடின் நல்லவர் போன்று பேசுகின்றார், பின்னர் குண்டுகளை வீசுகின்றார். இது பிரச்சினையாக உள்ளது. எனக்கு இது பிடிக்கவில்லை என்றும் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். (எ-இ)



## இஸ்ரேலின் வான் தாக்குதலில் சிறுவர்கள் உட்படப் பலர் சாவு

காஸா, ஜூலை 15

மத்திய காஸாவில் நீர் விநியோகம் இடம்பெறும் பகுதியில் இஸ்ரேல் மேற்கொண்ட வான் தாக்குதலில் ஆறு சிறுவர்கள் உட்படப் பத்துப் பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தத் தாக்குதலில் ஏழு சிறுவர்கள் உட்பட 16 பேர் காயங்களுக்குள்ளாகிச் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. நுசெய்ரெத் அகதிமுகாமில் தண்ணீர் விநியோகத்தில் ஈடுபட்டிருந்த வாகனத்துக்கு அருகில் வரிசையில் நின்றிருந்த மக்கள்மீது ஆளில்லா விமானத் தாக்குதல் இடம்பெற்றது என சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தொழில்நுட்பக் கோளாறால் பொதுமக்கள் தவறுதலாக தாக்கப்பட்டுள்ளனர் என தெரிவித்துள்ள இஸ்ரேல் இஸ்லாமிய ஜிகாத் பயங்கரவாதியே இலக்குவைக்கப்பட்டார். ஆனால் இலக்குத் தவறியது எனத் தெரிவித்துள்ளது. (எ-இ)

## துருக்கி தலைநகரில் அடுக்குமாடியில் தீ

அங்காரா, ஜூலை 15

துருக்கித் தலைநகர் அங்காராவில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் தீப்பற்றியதில் 3 பேர் உயிரிழந்துள்ளனர். இந்தக் குடியிருப்பின் 4ஆவது தளத்தில் ஏற்பட்ட தீ கட்டடத்தின் ஏனைய பகுதிகளுக்கும் பரவியது. தீயணைப்புப் பிரிவினர் சம்பவ இடத்துக்குச் சென்று தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

இந்தச் சம்பவத்தில் பச்சிளம் குழந்தை உட்பட 3 பேர் உடல் கருகி உயிரிழந்துள்ளனர். 30க்கும் மேற்பட்டவர்கள் மூச்சுத்திணறலுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முன்பள்ளி சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம்

யாழ்ப்பாணம், ஜுலை 15
சங்கானைக் கோட்ட முன்பள்ளி சிறார்களின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வு அண்மையில் சுழிபுரம் விக்டோரியா கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

சங்கானைக் கோட்டக்கல்வி முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் தலைவி திருமதி ப.கிருஷ்ணவேணி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக வலிகாமம் மேற்குப் பிரதேசசபையின் தவிசாளர் ச.ஜயந்தன் கலந்து சிறப்பித்தார். (ச-27)



வரலாற்றுச் சிறப்புப்பெற்ற வல்வை முத்துமாரி அம்மன் ஆலயத்தின் பூங்காவனத்துக்கு அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. ஆலய வளாகத்தில் பூங்காவனம் அமைக்கத் தெரிவுசெய்யப்பட்ட இடத்தில் பூசை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து அடிக்கல் நடப்பட்டது. நிகழ்வில் ஆலய பரிபாலனசபையினர், ஊர்மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-25,100)

# நல்லூர்ப் பிரதேசசபைத் தவிசாளர் வடக்கு ஆளுநருடன் சந்திப்பு



யாழ்ப்பாணம், ஜுலை 15
வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகனுக்கும், நல்லூர்ப் பிரதேசசபையின் தவிசாளர் ப. மயூரனுக்கும் இடையிலான சந்திப்பு யாழ்.சுண்டுக்குளியில் அமைந்துள்ள ஆளுநர் செயலகத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது.

நல்லூர்ப் பிரதேசசபையின் தேவைப்பாடுகள் தொடர்பான கோரிக்கை மனுவை வடக்கு ஆளுநரிடம் கையளித்த நல்லூர்ப் பிரதேசசபையின் தவிசாளர் மயூரன், திண்மக்கழி வகற்றல் தொடர்பாக எடுக்கப்பட்டுவரும் நடவடிக்கைகள் தொடர்பிலும் தெரியப்படுத்தினார். (ச-25,66)



சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் மாதாந்த திருவாசகம் முற்றோதல் நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் ஆச்சிரம மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ச-25,66)

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் ஜெயரஞ்சன் (ஜெயா)

(பிலபல வர்த்தகர், தொழிலதிபர்- பிரான்ஸ்)



தோற்றம்
13.02.1971

மறைவு
14.07.2025

யாழ்ப்பாணம் மயிலிட்டி வடக்கினை பிறப்பிடமாகவும், பிரான்ஸ்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஜெயரஞ்சன் அவர்கள் நேற்று (14.07.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்-தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சுப்பையா-கனகபூஷணம் தம்பதியரின் மருமகனும், சூரியகலா (பிரான்ஸ்) அன்புக்கணவரும், திவ்வியா (பிரான்ஸ்), சௌமியா (பிரான்ஸ்), ஜீவேஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற ஸ்ரீரஞ்சன், சயந்தன் (ஓய்வு நிலை பிரதி அதிபர்-யா/அருணோதயா கல்லூரி), ஜெயநந்தன் (ஆசிரியர்- யா/அத்தியார் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகம்மா, சந்திரகுமார் (பிரான்ஸ்), ஞானாம்பாள் (சுவிஸ்), காலஞ்சென்ற சந்திரகலா ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மயிலிட்டியிலுள்ள அவரது இல்லத்தில் இன்று (15.07.2025) செவ்வாய்க்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக்கிரியைக்காக அவரது வாழ்விடமான பிரான்ஸ் நாட்டுக்கு பிற்பகல் 02.00 மணியளவில் எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்
077 724 6412
077 996 6512

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமூக வலைத்தளங்களில் கொழும்பு மேயர் 'வைரல்'

ஒரு பொதுவிழாவில் பாரம்பரிய ஜப்பானிய நடனத்தில் கொழும்பு மேயர் வ்ரேகாலி பல்தசார் பங்கேற்றுள்ளார். இது சமூக ஊடகங்களில் வைரலாகியுள்ளது.
இலங்கை – ஜப்பான் நட்புறவின் 73 ஆண்டுகளைக் குறிக்கும் வகையில் தேசிய இளைஞர் சபையில் நடைபெற்ற நிகழ்வின் ஒரு பகுதியாக நடைபெற்ற பாரம்பரிய ஜப்பானிய நடன நிகழ்ச்சியில் மேயர் பங்கேற்றார். மேயரின் நடன நிகழ்ச்சியின் காணொலி சமூக ஊடகங்களில் பகிரப்பட்டுவந்தது. இலங்கைக்கான ஜப்பான் தூதர் அகியோ இசோமாட்டா மற்றும் முதன்மைச் செயலாளர் ஷினிச்சி முராட்டா ஆகியோரைச் சந்தித்ததில் பெருமைப்படுகின்றேன் என்று திருமதி பல்தசார் தனது முகநூல் பதிவில் தெரிவித்துள்ளார். இருப்பினும், நடன நிகழ்ச்சி காணொலி தொடர்பாக அவர் எதுவும் குறிப்பிடவில்லை. (எ-இ)

## இன்னும்...

குழியுமாகக் காணப்படுகின்றது என பொதுமக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.
யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டமொன்று, ஜனவரி மாதம் மாதம் 31ஆம் திகதி யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்துக்கு ஜனாதிபதி வருகை தரும்போது, சில பிரச்சினைகள் தொடர்பில்அறிந்தும், சிலமுன்னாயத்தங்களுடனும்தான் வந்திருந்தார்.
இதன்படி, அச்சுவேலி - தொண்டமனாறு பின்வீதி நீண்டகாலமாகச் சேதமடைந்து காணப்படுகின்றது என்றும், அதைச் சீரமைக்க உடன் நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதியால் உத்தரவிட்டிருந்தார். ஜனாதிபதி அநுர அறிவுறுத்தல் வழங்கி ஏழு மாதங்களாகின்ற நிலையில், இன்றுவரை அந்த வீதி சீரமைக்கப்படவில்லை.
ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் வைத்து, ஜனாதிபதி அநுரவே ஒருவிடயத்தில் உத்தரவிட்ட பின்னரும், அந்தப் பணிகள் இடம்பெறவில்லை என்றால், அத்தகைய கூட்டங்கள் தேவைதானா? என்று பொதுமக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (அ-ம-26)

## சிறுமிக்குத்...

தொல்லை வழங்கிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.
சிறுமி ஆலயத்துக்குச் சென்றிருந்த நிலையில், அங்குவைத்தே அவர் பாலியல் தொல்லையிலும் பாலியல் துன்புறுத்தலிலும் ஈடுபட்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.
பாதிக்கப்பட்ட சிறுமி பெற்றோருடன் சுன்னாகம் பொலிஸ் நிலையம் சென்று வழங்கிய முறைப்பாட்டுக்கு அமையவே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட நிலையில், நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (அ-ம-20-26)

## ஒன்றரை...

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெள்ளை ஈக்களைக் கட்டுப்படுத்தும் இருவாரகாலச் செயற்றிட்டம், சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவின் கச்சாய் கிராமத்தில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே, தென்னைப் பயிர்ச்செய்கைச் சபையின் தலைவர் மருத்துவர் சுனிமல் ஜெயக்கொடி இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்துவதற்காக 150 பணியாளர்கள் அழைத்து வரப்பட்டுள்ளனர். 150 இயந்திரங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன. ஒரு இயந்திரத்தை இயக்குவதற்கு ஆகக்குறைந்தது நால்வர் தேவை. எனவே, இந்தத் திட்டம் வெற்றிபெறுவதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும். ஆதலால், எமது ஆளணிப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் மக்கள் உதவவேண்டும்.
இலங்கையிலேயே வெள்ளை ஈயைக் கட்டுப்படுத்தும் தேசிய செயற்றிட்டம் முதன்முதலில் யாழ். மாவட்டத்தில்தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மூவாயிரம் மில்லியன் தேங்காய்கள் கிடைக்க வேண்டிய இடத்தில் அதைவிடக் குறைந்தளவு தேங்காய்களே கிடைக்கின்றன. இந்த வீழ்ச்சியில் பல காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்ற போதிலும், வெள்ளை ஈக்களின் தாக்கம் குறிப்பிட்டுக் கூறக்கூடிய வகையில் அமைந்துள்ளது. 2030ஆம் ஆண்டு 4 ஆயிரத்து 200 மில்லியன் தேங்காய்களை வருடாந்தம் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற இலக்குடன் செயற்படவுள்ளோம் - என்றார். (அ-ம-26-66)

## தனிமையில்...

இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது.
மயிலிட்டி வடக்கு, மயிலிட்டியைச் சேர்ந்த சுப்பிரமணியம் ஜெயரஞ்சன் (வயது-54) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவராவார்.
உயிரிழந்த நபர், கடந்த சில மாதங்களுக்கு முன்னர் பிரான்ஸிலிருந்து தாயகம் திரும்பி, தனிமையில் வசித்துவந்த நிலையிலேயே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26)

## திசைகாட்டி...

சிற்சில குறைபாடுகள் உள்ளன என்பது ஆட்சியாளர்களுக்கும் தெரியும். எனினும், கள்வர்களைப் பாதுகாத்தல் என்ற விடயத்திலிருந்து இந்த அரசாங்கம் நாட்டைப் காப்பாற்றியுள்ளது. குறுக்கு வழியில் சென்று கள்வர்களால் தப்ப முடியாது.
குற்றவாளிகள் சட்டத்தின் பிடிக்குள் சிக்கினால், அவரைப் பாதுகாக்க தற்போதைய அரசாங்கம் தலையிடுவதில்லை. இது மிகச்சிறந்த விடயம். நாட்டை நேசிக்கும் மனிதனாக, இந்த விடயத்தைப் பாராட்டியே ஆக வேண்டும். இதற்குரிய கௌரவத்தை அரசாங்கத்துக்கு வழங்க வேண்டும். கடந்த ஆட்சியாளர்களின் கீழ் இப்படி நடக்கவில்லை. கடந்த காலங்களில் கொள்ளையர்கள் பாதுகாக்கப்பட்டனர். இதை எவராலும் மறுக்கமுடியாது - என்றார். (அ-ம-44)

## பழிவாங்கல்...

பாடசாலையை முடக்கி நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.
'பாடசாலையின் ஆசிரியை ஒருவர் வழங்கிய போலியான முறைப்பாட்டுக்கு அமையவே, அதிபருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. போலிக் குற்றச்சாட்டின் அடிப்படையில் இடமாற்றங்கள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுவது தவிர்க்கப்படவேண்டும். இந்தப் பொறுப்பற்ற செயற்பாட்டால், பாடசாலையின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்பட்டுள்ளது' என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் குற்றஞ்சாட்டினார்கள்.
போராட்டம் தொடர்பில் தகவல் அறிந்து, வலிகாமம் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சஞ்சீவன் தலைமையில் உயர்மட்ட அதிகாரிகள் சம்பவ இடத்துக்குச் சென்று மாணவர்களின் பெற்றோருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இதன்போது அதிபர் மீதான குற்றச்சாட்டுத் தொடர்பில் விசாரிப்பதற்கு இரண்டு மாதகால அவகாசம் தேவையெனவும், இதற்குத் தமக்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் கேட்டுக்கொண்டனர்.
எனினும், அதற்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் உடன்படாத நிலையில் ஆர்ப்பாட்டம் நேற்று நண்பகல் 12 மணி வரை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது. ஆர்ப்பாட்டம் காரணமாக மேற்படி பாடசாலையின் ஆசிரியர்களும் நீண்ட நேரமாகப் பாடசாலைக்கு வெளியே காத்திருந்து விட்டுத் தமது வரவை உறுதிப்படுத்துவதற்கான கையொப்பத்தை வைக்க முடியாத நிலையில் வீடு திரும்பினர்.
இதைத் தொடர்ந்து, பிற்பகல் 12.30 மணியளவில் வடக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளரைச் சந்திப்பதற்காக பாடசாலையின் மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் இணைந்து கல்வி அமைச்சின் அலுவலகத்திற்குச் சென்றபோதும் அவரைச் சந்திக்க முடியவில்லை. இதைத் தொடர்ந்து, இடமாற்றம் செய்யப்பட்ட அதிபர் மீள நியமிக்கப்படும் வரைக்கும் போராட்டம் தொடரும் என்று பெற்றோரும், மாணவர்களும் தெரிவித்துள்ளனர். (அ-ம-66)

## குடும்பத்...

தாக்குதலை நடத்தியுள்ளது. இந்தச் செயலில் ஈடுபட்ட நால்வர் நீதிமன்ற உத்தரவுக்கு அமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-
கந்துவெட்டிக் கும்பலைச் சேர்ந்த ஒருவர், குடும்பத் தலைவர் ஒருவருக்கு இரண்டரை இலட்சம் ரூபாவை வட்டிக்கு வழங்கியுள்ளார். தற்போது வட்டியும் முதலுமாக ஏழு லட்சம் ரூபா வரை சேர்ந்துள்ள நிலையில், அந்தப் பணத்தைக் கோரி மிரட்டி வந்துள்ளார். இதன் தொடர்ச்சியாக, வட்டிக்குப் பணம் கொடுத்தவர், இன்னும் மூவருடன் காரில் சென்று, கடன் பெற்றவரைக் கடத்திச் சென்றுள்ளார்.
அவரை வலுக்கட்டாயமாக இளவாலைப் பகுதிக்குச் கொண்டுசென்று அங்கு வைத்து நிர்வாணமாக்கித் தாக்குதல் நடத்தியுள்ளனர். அதை தமது திறன்பேசிகளில் வீடியோவாகவும் பதிவு செய்துள்ளனர். இதையடுத்து, தாக்குதலுக்கு உள்ளானவர் அவர்களிடமிருந்து ஒருவாறாகத் தப்பித்து, இந்த விடயம் தொடர்பில் காங்கேசன்துறைப் பொலிஸாரிடம் முறைப்பாடு வழங்கியுள்ளார்.
விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், தாக்குதல் நடத்தியதாகக் குற்றஞ்சாட்டப்படும் நால்வரைக் கைது செய்துள்ளனர். அவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளதுடன், குறித்த குழுவிடம் இருந்து பெறப்பட்ட திறன்பேசிகளும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படவுள்ளன.
இதேபோன்றதொரு சம்பவம் கடந்த சில மாதங்களுக்கு முன்னரும் இடம்பெற்றது. அந்தத் தாக்குதல் தொடர்பான வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் பரவியதைத் தொடர்ந்து, அந்தக் குழுவை பொலிஸார் கைது செய்து நீதிமன்றத்தில் முற்படுத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## பயங்கரவாதம்...

ரத்ன எச்சரித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
அரசாங்கம் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தின் ஊடாக நீண்டகாலமாக கடும் விமர்சனங்களுக்கும், எதிர்ப்புக்களுக்கும் உள்ளாகியிருக்கும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பதிலீடு செய்வதற்கான முயற்சிகளை மேற்கொண்டுவருகின்றது.
குறித்தவொரு செயற்பாடு பயங்கரவாதம் என்பதற்கான வரைவிலக்கணத்தினுள் உள்ளடக்கப்பட வேண்டுமாயின், அது மிகப்பயங்கரமானதொரு நடவடிக்கையுடன் தொடர்புடையதாகவோ அல்லது மிதமிஞ்சிய அச்சுறுத்தலை ஏற்படுத்தக் கூடியதாகவோ இருக்கவேண்டும்.
அதேபோன்று பயங்கரவாதத்துடன் தொடர்புடைய சில செயற்பாடுகள் வன்முறையற்றதாக அமையக்கூடும். தீவிரவாத அமைப்பின் உறுப்பினர் ஒருவர் அவ்வமைப்பின் இலக்கை அடைந்து கொள்ளும் நோக்கில் இலத்திரனியல் உபகரணங்கள், கணினி கட்டமைப்புக்கள் போன்றவற்றை யாரும் அறியாத வண்ணம் மறைத்து வைத்திருத்தல் போன்ற செயற்பாடுகளை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடமுடியும். இருப்பினும் சிலரது செயற்பாடுகளில் வன்முறையின் கூறுகள் தென்படினும், அவற்றைப் பயங்கரவாத எதிர்ப்புச்சட்டங்களின் ஊடாகக் கையாளக்கூடாது.
அதுமாத்திரமன்றி, காலிமுகத்திடல் அரகலய போராட்டத்தின்போது பதிவான சில நடவடிக்கைகளை சிலர் பயங்கரவாத செயற்பாடு எனக் கூறலாம். அங்கு பதிவான சில நடவடிக்கைகள் முற்றுமுழுதாக அமைதியான முறையில் இடம்பெற்றவை அல்ல. எனினும், அவற்றைப் பயங்கரவாத செயற்பாடாக வகைப்படுத்தமுடியாது.
போராட்டக்காரர்கள் மீதான தாக்குதல்களை அடுத்தே வன்முறைகள் தீவிரமாகின. எனவே, போராட்டக்காரர்களின் எதிர்வினையை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழன்றி, பொதுச்சட்டத்தின் கீழேயே கையாளவேண்டும் - என்றார். (அ-ம-இ)

## காணி...

மன்னார் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தின் ஒருங்கிணைப்பில் வலிகாமம் வடக்கைச் சேர்ந்த பல்வேறு சிவில், சமூக அமைப்புக்கள் இணைந்து இந்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளன.
இதன்படி, இன்று காலை 9.30 மணி தொடக்கம் காலை 10.30 மணிவரை இந்தப் போராட்டம் இடம்பெறும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ-ம-66)

## முதல்...

சுபாஜினி, நிர்வாக சேவை சிறப்புத் தரத்துக்கு பதவி உயர்வு பெற்ற நிலையில் வடமத்திய மாகாணசபைக்கு செயலாளராக நியமிக்கப்பட்டார். இதையடுத்தே, அவர் நேற்றுத் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார். (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆங்கில, சிங்கள மொழி வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் O/L வகுப்பு மாணவர் களுக்கான ஆங்கிலம், சிங்கள மொழி வகுப்புக்கள் பட்டதாரி ஆசிரியரால் உங்கள் வீடுகளுக்கு வந்து கற்பிக்கப்படும்.
தொடர்புகளுக்கு:- 075 134 7080

வேலையாட்கள் தேவை
திருநெல்வேலியில் அமைந்துள்ள பண்ணை ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை
சம்பளம்
➤ ஆண் - 60 000 - 70 000
➤ பெண் - 45 000
தொடர்புகளுக்கு: 077 354 9140

Vacancy
- Sales Manager (Basic 90,000/=)
- ASM (Basic 60,000/=)
- Online, Part time Staffs
அனுபவம் இல்லாதவர்களுக்கு பயிற்சி வழங்கப்படும்.
Contact - 077 996 9661

சிறுநீரகம் தேவை
48 வயதுடைய சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு B+ குருதி வகையை உடைய சிறுநீரகம் தேவைப்படுகிறது. சிறுநீரகம் தானம் செய்ய விரும்புவர்கள் கீழ் உள்ள இலக்கத்தை தொடர்பு கொள்ளவும்.
தொடர்பு: 077 893 9807

# விழிப்புலனற்றோருக்கு நவீன சாதனம் கண்டுபிடித்த மாணவனுக்குப் பாராட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 15

கண்பார்வையற்றவர்களுக்கான நவீன இலத்திரனியல் சாதன மொன்றை கண்டுபிடித்த யாழ். சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி யில் தரம் 8 இல் கல்விகற்கும் மாணவன் ஆதித்தன் ஐஸ்மி னன் பாராட்டிக் கௌரவிக்கப்பட் டுள்ளார்.

கருவி நிறுவனத்தின் தலைவர் க.சர்வானந்தா தலைமையில் கல்வியங்காடு மூன்றாம் கட்டை யில் அமைந்துள்ள கருவி நிறுவ னத்தின் உற்பத்தி மற்றும் சந் தைப்படுத்தல் அலகு வளாகத் தில் கடந்த சனிக்கிழமை இந்த நிகழ்வு இடம்பெற் றது. மாணவனின் புத்தாக்கத் திறனைப் பாராட்டி



மலர்மாலை அணிவித்து, சிறப்புப் பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

(ச-41-66)

# வாக்குறுதிகளை நிறைவேற்றும் திறன் அரசாங்கத்துக்கு இல்லை

## பொதுஜன பெரமுன சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 15

வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றக்கூடிய திறன் ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங் கத்துக்கு இல்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெர முனவின் சுட்டிக்காட்டியுள்ளது.

பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், பொதுஜன பெர முனவின் பொதுச்செயலா ளர் சாகர காரியவசம் தெரிவித்ததாவது:

உழைக்கும்போது செலுத்தும் வரியை குறைப்பதற் குரிய சாதகமான சூழலை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஏற்படுத்திக் கொடுத்தார். இந்த சாதகமான தன்மையை பயன்படுத்தி ஜனா திபதி அநுரகுமார திஸாநாயக்க உழைக்கும்போது செலுத்தும் வரியைக் குறைத்தார். மற்றும்படி, இவர்கள் இதுவரை எந்தக் காத்திரமான திட்டங்களையும் மேற்கொள்ளவில்லை. ஏனெ னில், மக்களுக்கு வழங்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றும் இயலுமை அரசாங்கத்திடம் இல்லை - என்றார். (ம-இ)

மரண அறிவித்தல்



தோற்றம் 08 . 06 . 1955
மறைவு 11 . 07 . 2025

துரைசிங்கம் மகிழாம்பிகை
(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியர் - ஆறுமுக வித்தியாசாலை சுழிபுரம்)

பறாளாய் வீதி, சுழிபுரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட துரைசிங்கம் மகிழாம்பிகை அவர்கள் கடந்த வெள்ளிக்கிழமை (11.07.2025) இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை (செட்டி வாத்தியார்) - இலட்சுமி தம்பதியினரின் சிரேஷ்ட புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தப்பிள்ளை - செல்லமுத்து தம்பதியினரின் பாசமிகு மருமகளும், துரைசிங்கம் (அச்சணை - ஓய்வுபெற்ற களஞ்சியப்பொறுப்பாளர் - தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற தர்மதாசன் மற்றும் சுபத்திரா, தனபாலசிங்கம் (சுவிஸ்), கந்தராசா, பாலச்சந்திரன் (யாழ் மாநகர சபை), இராஜராஜேஸ்வரி (ஜேர்மனி), மனோன்மணி ஆகியோரின் சகோதரியும், சற்குணானந்தன், வசந்தநாயகி (சுவிஸ்), தர்மினி, வளர்மதி (ஆசிரியர் - யாழ் இந்து ஆரம்ப பாடசாலை), மகேந்திர நாதன் (ஜேர்மனி), சிவகுமார் (ஆசிரியர் - மகாஜனா கல்லூரி, தெல்லிப்பழை), காலஞ்சென்றவர்களான பகவதி - கனகசுந்தரம், புஸ்பராஜா - செல்லப்பாக்கியம் மற்றும் விநாயகமூர்த்தி - வசந்தயோகம் (ரூபி) (GIT Institute Director Colombo 06), இராஜேஸ்வரி - விஜயராகவன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், கஜரூபன் (ஆசிரிய மாண்வன் - வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி), சுகன்யா (உருகுணைப் பல்கலைக்கழகம்), மதுஷன் (ஜேர்மனி), மிதுனன் (ஜேர்மனி), கிருசான் ஆகியோரின் பெரியம்மாவும், மாருதன் (சுவிஸ்), சாருஜன் (சுவிஸ்), சர்வினா, கிருசாந்தி (ஆசிரியர் - யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி) ஆகியோரின் மாமியும், சுதாகர் (கணக்காளர் - இ.போ.ச தலைமை காரியாலயம்) - பத்மாசினி (மொழி பெயர்ப்பாளர் - சுகாதார அமைச்சு), சுதா (சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்கு பல்கலைக்கழகம்) - கலாநிதி சிறீதரன் (சிரேஷ்ட விரிவுரையாளர், கொழும்பு பல்கலைக்கழகம்), திலீபன் (கனடா) - கௌரி (கனடா), Dr. ஜனகன் (IDMNC International chairman) - சாலினி (வைத்தியர்), சர்மிலா (லண்டன்) - செந்தூரன் (லண்டன்), பொன்னப்பெருமாள் (அபிவிருத்தி உத்தியோகத்தர் - கமநல சேவை நிலையம், சண்டிலிப்பாய்) ஆகியோரின் சித்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (16.07.2025) புதன்கிழமை காலை 08.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பறாளாய் வீதி,
சுழிபுரம்

தகவல்: குடும்பத்தினர்
க.துரைசிங்கம்
077 538 5603

(CS 58855) E

# யாழ். பொதுநூலக மீளாய்வுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

கடந்த வரவு-செலவுத் திட்டத்தில் யாழ்ப் பாணம் பொதுநூலக அபிவிருத்திக்காக 100 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டி ருந்த நிலையில், அபிவிருத்தி நடவடிக் கைகளின் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் வடமாகாண ஆளுநர் செயல கத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற் றது. வடமாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் தலைமையில் நடை பெற்ற கலந்துரையாடலில் வடமாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் அ.சோதிநாதன், அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலர் ஆர்.குருபரன், வடமா காணப் பிரதிப் பிரதம செயலாளர் செ. பிரணவநாதன், வடமாகாண உள்ளூ ராட்சி ஆணையாளர் திருமதி தேவந்தினி பாபு, யாழ்.பொதுநூலகத் தின் பிரதான நூலகர், மத்திய கட்டடங் கள் திணைக்களப் பொறியியலாளர், யாழ்.மாநகரசபையின் பொறியியலா ளர், நூலக நிறுவனத்தினர் ஆகியோர் கலந்துகொண்டனர். (எ-41-66)

வேலைவாய்ப்பு
சாரதி (Driver)
ஆர்வமுள்ளோர் அலுவலக நேரத்தில் (திங்கள் - வெள்ளி)
9 am to 5 pm,
நேரில் வருகை தரவும்.
468, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(CE/45508) J-1
தொடர்பு:- 021 222 2561

# வைரவர் உற்சவம்

யாழ்ப்பாணம், ஜூலை 15

கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீர கத்தி விநாயகர் ஆலயத்தின் வைரவர் உற்சவம் இன்று செவ்வாய்க்கி ழமை நடைபெறவுள்ளது. மாலை 6மணிக்கு சிறப்புப் பூஜைகள் இடம் பெற்று வைரவர் பெருமானுக்கு மடை பரவி வழிபாடுகள் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி : 021 493 0000 - விளம்பரம் : 021-493 1111 விளம்பரம்:advt@uthayan.com
இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 15.07.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.